**செய்தி வெளியீடு** **நாள் : 13.07.2024**

**வருவாய் பகிர்வு முறையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் வாழை சம்பந்தப்பட்ட கழிவுகளை சேகரித்து பயனுள்ள பொருள் தயாரித்தல்**

திடக்கழிவு அகற்றல் என்பது பல்வேறு கழிவுகளின் கலவையான தன்மை உட்பட பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது, இது மூலாதாரங்களை பிரித்தல், பொருத்தமான செயலாக்க வசதி அல்லது குப்பை சேமிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லுதல், கழிவு மேலாண்மை விதிமுறைகளுக்கு இணங்குதல் போன்றவை தேவைப்படுகிறது. இந்த சவால்களை எதிர்கொள்ள கொள்கை முடிவு, உள்கட்டமைப்பு முதலீடு, சமூக ஈடுபாடு மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான யுக்தி தேவைப்படுகிறது.

**மேற்கண்ட வழிகளில், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் உருவாகும் வாழை தொடர்பான கழிவுகளை சேகரித்து பதப்படுத்துவதற்கு விருப்ப வெளிப்பாட்டினை (Expression Of Interest) வரவேற்கும் முன் முயற்சியை அங்காடி நிர்வாகக் குழு மேற்கொண்டுள்ளது.**

இந்த முன் முயற்சியானது வளாகத்தில் முறையான கழிவு மேலாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் சுற்றுச்சூழல், நிலத்தன்மை மற்றும் கழிவு மேலாண்மை போன்றவற்றை விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்துவதற்கான உறுதிப்பாட்டுடன் ஒத்துப்போவதோடு நிலப்பரப்புகளில் கரிம கழிவுகளை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அந்த வகையில், **"வருவாய் பகிர்வு முறையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் வாழை சம்பந்தப்பட்ட கழிவுகளை சேகரித்து பயனுள்ள பொருள் தயாரித்தல்"** பணிகளை மேற்கொண்டிட ஆவணத்தில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி முன்மொழிவை சமர்ப்பிக்க தகுதியான தனி நபர்கள் /முகமைகள் / நிறுவனங்களை அங்காடி நிர்வாகக் குழு அழைக்கிறது.

ஆர்வமுள்ள தனிநபர்கள் / முகமைகள் / நிறுவனங்கள் விரிவான விருப்ப வெளிப்பாட்டிற்கான (EOI) ஆவணங்கள் மற்றும் குறிப்பு விதிமுறைகள் போன்றவற்றை www.tntenders.gov.in மற்றும் http://www.cmdachennai.gov.in இணையதளத்தில் 12.07.2024 முதல் 29.07.2024 மாலை 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

முதன்மை நிர்வாக அலுவலர், அங்காடி நிர்வாகக் குழு, கோயம்பேடு, சென்னை-600107 அலுவலகத்தில் 22.07.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் விளக்க அமர்வை(clarification session) பயன்படுத்திக்கொள்ளவும். ஏதேனும் தெளிவுபடுத்த சந்தேகங்கள் இருப்பின் 23.07.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் caommc2012@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது மேல் குறிப்பிட்டுள்ள அலுவலக முகவரியிலோ இந்த அலுவலகத்தை அணுகலாம்.

www.tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் 'விருப்ப வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 30.07.2024 மாலை 3.00 மணி வரை.

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.**